# Deposition of Witness

In the Court of the Principal District Judge, Vellore District.
S.C.No.138 of 2017
Prosecution Witness No.P.W.22 (L.W.44)

| | | | |
|---|---|---|---|
| Name | : Karthikeyan | Caste | : MBC |
| Father's Name | : K.M.Venkatesan | Calling | : TASMAC |
| Village | : Kandaneri | Religion | : Hindu |
| Taluk | : Vellore | Age | : 47 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 23.01.2025.

(A1 to A5 present, A6 absent and his absence condoned on filing u/s 317 Cr.P.C. petition)

**முதல் விசாரணை**

நான் மேற்படி விலாசத்தில் வசிக்கிறேன். நான் கழனிப்பாக்கத்தில் உள்ள டாஸ்மார்க் கடையில் சேல்ஸ்மேனாக வேலை செய்கிறேன். 27.06.2015 அன்று எனக்கு உடம்பு சரியில்லாத காரணத்தினால் ஒரு வாலிபனாக விஜயகுமாரும், நானும் பள்ளிகொண்டாவிற்கு மருததுவரை பார்க்க சென்றோம். காலை 5, 5.30 மணிக்கு சென்றோம். 24 மணி நேர மருத்துவமனைக்கு சென்றோம். நானும், என்னுடன் வந்த நபரும் பள்ளிகொண்டா பஸ் ஸ்டாண்டில் நின்றுக் கொண்டு இருந்தோம்.

அப்போது காவல் ஆய்வாளர் சீருடையில் எங்களை காவல் நிலையத்திற்கு அழைத்தார். நானும், என்னுடன் வந்த தம்பியும் பள்ளிகொண்டா காவல் நிலையத்திற்கு போனோம். அப்போது போலிசார் ஷமில்பாஷா என்பவர் பள்ளிகொண்டா காவல் நிலையத்தில் அதற்கு முன்பு இருந்த போலிசார் விசாரித்து போலிஸ் காவல்

நிலையத்திலிருந்து அனுப்பிய பின்னர் அவர் மருத்துவமனையில் சேர்ந்து, சென்னை மருத்துவமனையில் அவர் இறந்துவிட்டார் என்றும், அது விஷயமாக என்னை அழைத்து விசாரிப்பதாகவும், விசாரணையில் வரைபடம் வரைவதாகவும், அதற்கு என்னையும், விஜயகுமாரையும் சாட்சியாக இருக்கும்படி கேட்டுக் கொண்டார்கள். அதற்கு நாங்கள் ஒப்புக்கொண்டோம். போலிசார் படம் வரைந்தார்கள். அதற்கு நாங்கள் சாட்சி கையொப்பம் போட்டோம். அந்த வரைபடத்தை என்னால் பார்த்தால் அடையாளம் காட்ட முடியும். 27.06.2015 ம் தேதியிட்ட வரைபடத்தை பார்த்து சாட்சி அடையாளம் காட்டினார். அதை காலை 5.30 மணிக்கு தயார் செய்தார்கள். மேற்படி பார்வை மகசரில் நானும், என்னுடன் வந்த தம்பியும் கையொப்பம் போட்டோம். முதலில் உள்ளது அந்த தம்பியின் கையொப்பம். 2 வது ஆக உள்ளது என்னுடையது கையொப்பம். பார்வை மகசர் அ.சா.ஆ.39.

1 மற்றும் 6 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

என் வீட்டிலிருந்து பள்ளிகொண்டா காவல் நிலையம் சுமார் 4 கி.மீ. தூரத்தில் உள்ளது. என்னுடன் வந்த விஜயகுமார் என் ஊரைச் சார்ந்தவர் தான். என் வீட்டிலிருந்து, மருத்துவமனை சுமார் 4 கி.மீ. தூரம் உள்ளது. நான் மருத்துவமனைக்கு நேரடியாக செல்லாமல் ஏன் பேருந்து நிலையத்தில் நின்றேன் என்றால் தேநீர் அருந்த நான் நின்றேன். போலிசார் விசாரித்தபோது நான் தேநீர் அருந்த பேருந்து நிறுத்தத்தில் நின்றேன் என்று சொன்னேன்.

நான் தற்போது முதல் விசாரணையில் அளித்த சாட்சியத்தை தான் போலிசாரிடமும் சொன்னேன். 2 பேருந்து நிறுத்ததங்கள் பள்ளிகொண்டாவில் இருக்கும் நிலையில் எந்த பேருந்து நிறுத்தத்தில் நான் இருந்தேன் என்று சொல்லவில்லை என்றால் போலிசார் கேட்கவில்லை நான் சொல்லவில்லை. ஆம்பூர் செல்லும் வழியாக உள்ள பேருந்து நிறுத்தத்தில் நின்றேன். போலிசார் தான் என்னை அழைத்தார். வழக்கின் விவரங்கள் போலிசார் சொல்லி எனக்கு தெரியும்.

நான் கையெழுத்து போட்ட ஆவணத்தில் என்ன விவரம் உள்ளது என்று எனக்கு தெரியுமா என்றால் போலிசார் படம் போட்டார்கள். அது சம்மந்தமாக மகசர் தயார் செய்ததாக சொன்னார்கள். கையெழுத்து போட்டேன். மகசரில்என்ன எழுதியுள்ளது என்ற விவரத்தை நான் படித்துப் பார்க்கவில்லை. போலிசார் அதில் எழுதப்பட்டுள்ள விவரங்களை சொன்னார்கள். அதனால் நான் படித்துப் பார்க்கவில்லை.

2 முதல் 4 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

1 மற்றும் 6 எதிரிகளின் தரப்பு குறுக்கு விசாரணையை ஏற்றுக் கொள்கிறார்.

5 ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

எனக்கு உடம்பு சரியில்லாததால் மருத்துவமனைக்கு சென்றேன். பள்ளிகொண்டா காவல் நிலையத்திலிருந்து, மருத்துவமனை சுமார்

ஒரு கி.மீ. தொலைவில் உள்ளது. 24 மணி நேர மருத்துவமனைக்கு செல்வதற்காக பேருந்து நிறுத்ததற்கு வந்தோம். அன்று நான் என்னுடைய பணிக்கு செல்லவில்லை. அன்று எனக்கு விடுப்பு ஆகும். போலிசார் பெயர் அட்டை அணிந்திருப்பார்கள் அதில் பெயர் பார்த்தாயா என்றால் கோவிந்தசாமி என்ற பெயர் இருந்தது.

போலிஸ் அதிகாரி கூப்பிட்டதின் பேரில் நான் காவல் நிலையத்திற்கு சென்றேன். போலிசார் கையொப்பம் போடச்சொன்னார்கள். கையொப்பம் போட்டேன். போலிஸ் அதிகாரி கையொப்பம் போடச் சொன்னதால் கையொப்பம் போட்டேன். போலிசாரிடம் நான் கையொப்பம் போட்ட பின்னர் அதன் பின்னிட்டு யாரும் என்னை விசாரிக்கவில்லை. கோவிந்தசாமி என்னை விசாரித்த பின்னர் யாரும் என்னை விசாரிக்கவில்லை.

நான் அரசு மதுபான கடையில் பணிபுரிவதற்கு போலிசாரிடம் அத்தாட்சி எதுவும் கொடுக்கவில்லை. காவல் நிலையத்தில் நானும், விஜயகுமாரும் இருந்தோம். காவல் நிலையம் சென்ற பின்னர் நான் மருத்துவமனைக்கு சென்று சிசிக்சை பெற்றேன்.

விஜயகுமார் வீட்டிற்கும், என் வீட்டிற்கு இடையில் ஒரு தெரு உள்ளது. எனக்கு தான் உடம்பு சரியல்லை. விஜயகுமார் நன்றாக தான் இருந்தார். எனக்கு உடம்பு சரியில்லாததால் அவரை அழைத்து வந்தேன். போலிசார் நான் மட்டும் விஜயகுமார் காவல் நிலையத்தில் இருந்தபோது தான் பார்வை மகசர் மற்றும் படம் தயார் செய்தார்கள். நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை

இல்லை.

PERUMALSAMY MURUGAN

Digitally signed by PERUMALSAMY MURUGAN
Date: 2025.01.23 17:09:54 +0530